**ஜனவரி - 6**

**"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்." - சங் 90:12**

கிறிஸ்தவன் தன்னுடைய நாட்களை நிதானத்தோடு கணக்கிட்டாலும், அவன் வருத்தந்தோய்ந்த அல்லது துயருற்ற மனோபாவத்துடன் அப்படி செய்கிறதில்லை. நாட்கள் செல்லும்போது அவன் அவைகளை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கும், மற்றவர்கள் தங்களுடைய பரதேசியாய் திரியும் பிரயாணத்தில் அவர்களுக்கு உதவவும், தேவனுடைய பார்வையில் பிரியமாயிருக்கக்கூடிய குணத்தை அதிகதிகமாகத் தன்னில் விருத்தி செய்யவும், அதாவது, அதிகதிகமாக தேவனுடைய பிரியகுமாரனைப் போலாவதற்காகவும், கிடைத்த இத்தனை ஆசீர்வாதங்கள் என்றும், இத்தனை சிலாக்கியங்கள் என்றும், இத்தனை சந்தர்ப்பங்கள் என்றும் கணக்கிடுகிறான்.

**- Z ’01, 333 (R 2895).**

இழந்து போனதைத் திரும்பப் பெறப்போகிற வகுப்பார் நீதியின் அனுபவத்தை அடைந்து கொண்டிருக்கும்போது, பாவத்தை வெறுக்கவும் நீதியை நேசிக்கவும், அதாவது, கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம் என்பதைக் கற்றுக்கொள்ளத்தக்கதாக, முன்பு தீமையோடு கூடிய அனுபவத்திலுள்ள தங்களுடைய ஜீவியத்தை ஆராயத் தங்களை சாத்தியமாக்க ஜெபம் செய்வார்கள். தங்களுடைய நித்தியகால நலம், சத்தியத்திலும் நீதியிலும் இருக்கும் வழியில் இந்த ஜெபத்திற்குக் கர்த்தர் பதிலளிப்பார்.

**-P ’26, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோபு 12:2,3,7-13,16,17,22; 28:12-28; 32:9; சங் 107:43; 111:10; நீதி 1:5,7;20-2:20; 3:13-26,34,35; 4:4-22; 8:1-9; 16:16,20-24; 1கொரி 1:24,30; யாக் 1:5.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 151 (R 5688).**

**வினாக்கள் : இந்த வார அனுபவங்களில் விசேஷமாக எது ஞானத்தை கற்றுத் தந்தது? அவற்றின் மத்தியில் நான் எவ்வாறு நடந்து கொண்டேன்? அவற்றின் பலன் என்ன?**